ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2279/08 - 2022 මැයි මස 09 වැනි සඳුදා - 2022.05.09

2279/08 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 3/2/1/142.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/18/2019/WS/ 508.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம் மினுவங்கொடை பிரதேச செயலகப் பிரிவின் இல. 125/2, மினுவங்கொடை வடக்கு கிராம அலுவலர் பிரிவில், மெவெடமுல்லை என்ற ஊரில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் சார்பாக கம்பஹா சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட 2022.02.28 ஆந் திகதியை உடைய ஆரம்ப காணிப் பிரித்தெடுப்பு இலக்கம் கம். 4289 இல் காணித்துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள 0.1012 ஹெக்டயார் விஸ்தீரண முடைய காணித் துண்டின் விபரம் பின்வருமாறு:

**காணித்துண்டு இல. 1**

காணியின் பெயர்: கோன்கஹவத்த அல்லது கோன்கஹவத்தே கெபல்ல; விபரம்: வீட்டுத் தோட்டம், சுமார் 40-50 வருட பழமையுடைய தென்னை பயிர்ச்செய்கை காணப்படுகிறது; உரிமை கோருபவர்: இல. 11, பொலிஸ் வீதி, மினுவங்கொடையில் வதியும் கே. ஏ. மாலா மங்கலிக்கா ராஜசூரிய கலு ஆரச்சி என்பவர்; விஸ்தீரணம்: 0.1012 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மு.ப. 10.00 மணிக்கு மினுவங்கொடை பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யூ. டபிள்யூ. ரி. யூ. ராஜகருணா,
பிரதேச செயலாளர்,
மினுவங்கொடை.

பிரதேச செயலகம்,
மினுவங்கொடை,
2022, மே 04.

EOG 05 - 0033